Registered No. M.—253.

விலாசம்.—
'அறிவுவிளக்கம்' பத்திராதிபர்,
திருவனந்தபுரம்.

அறிவு விளக்கம்.

ஓர் மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

"எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு."

புத்தகம்—I. { 1901-ஆம் மார்ச்சுமீ 10-உ. திருவனந்தபுரம். } இலக்கம்—2.

விஷயங்கள்.

ACC. NO. 2467

பத்திரிகை. } அ. குமாரசுவாமிப் புலவர்.
தமிழ்நூலாராய்ச்சி. } அ. குமாரசுவாமிப் புலவர்.
ஆங்கிலேய தருக்கம்.—K. N. சிவராஜபிள்ளை B. A.
சத்தியவதி.—T. லட்சுமணபிள்ளை B. A.
ஆங்கிலேய அரசாங்க அமைப்பு.—S. கணபதிப்பிள்ளை.
மத ஐக்கியம்.—P. V. கணபதிப்பிள்ளை B. A.
செல்வியாள்.—A. K. கிருஷ்ணையங்கார்.
சமாசாரக்குறிப்புகள்.

பத்திராதிபர்.—வள்ளல், சோ. சிவஞானதேசிகர்.

நாகர்கோவில்:
நாஞ்சில்நேசன் பிரஸில் பதிப்பிக்கப்படுகின்றது.

1901.

☞ இது ஒவ்வொரு இங்கிலீஷ் மாதமும் 10-ம் உ வெளியிடப்படும்.

வருஷ சந்தா ரூ. 2—0—0. தனிப்பிரதி ரூ. 0—4—0.

அறிவு விளக்கம்.

ஓர் மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

புத்தகம்—I. { சார்வரி-௵ மாசி ௴ 29-உ. / திருவனந்தபுரம். } இலக்கம்—2.

குறிப்பு:—இப்பத்திரிகாபோஷகர்கள்(Patrons)இரண்டு பத்திரிகைக்குரிய வருடச்சந்தாவினின்றும் அதாவது (5 Rs) ஐந்து ரூபா தொடக்கம் தங்கள்தங்கள் மனப்பாங்கின்படி குறிப்பிடுகின்ற தொகையை முற்பணமாகவே உபகரிக்கவேண்டும். ஆனல் பத்திரிகையின் வளர்வு தேய்வுக்கேற்பத் தங்கள் வருஷநிபந்தப் பணத்தைக் கூட்டவும், 5-ரூபாவுக்குக் குறையாமல் குறைக்கவும் தக்கதே. இவர்களுக்கு அனுப்பப்படுகிற பத்திரிகை ஒன்றுக்கதிகப்படின் பிரத்தியேகம் விலை வாங்கப்படும். இவர்கள் உபகாரவண்மை மாட்சிமைகொண்டே இப்பத்திரிகை ஒருமாத இடையில் நடைபெறுகின்றது.

☞ நமது சந்தாதார் ஒவ்வொருவரும் முற்பணமாகவே அனுப்பித்தரல் வேண்டும். கடிதம், விஷயம், பணம் முதலியன யாவும் அடியிற்கண்ட விலாசப்படி பத்திரிகாசிரியருக்கே அனுப்புதல் வேண்டும். விஷயதானம்செய்பவர்கள், ஒவ்வொரு தமிழ்மாதமும் 5-ம் தேதிக்குள் பத்திரிகாசிரியருக்குக் கிடைக்கும்படி அனுப்பித்தரல் வேண்டும். பிரசுரிக்கப்படாத விஷயங்கள் திரும்ப அனுப்பப்படமாட்டா.

வள்ளல். சோ. சிவஞானதேசிகர்.
"அறிவு விளக்கம்" பத்திராதிபர்,
திருவனந்தபுரம்.

பத்திரிகை.

காலந்தோறும் ஆங்காங்கு நிகழும் நவீந விடயங்களையும், கல்வி, ஆசாரம், சமயம், அரசியல், வாணிகம், நீதி, நீதிபோதக சரிதம் முதலிய விடயங்களையும் யாவரும் எளிதிலுணரத்தக்க வாக்கிய வரயிலாக அறிவினை விளக்கிவருதல் பத்திரிகைக்கு

அலங்காரமாகும். பத்திரிகை, பத்திரம், பஞ்சிகை என்பன ஒருபொருட் சொற்கள். பத்திரிகையை நடுவுநிலை தவறாது நன்கு நடாத்துவோர் பத்திராதிபர் எனப்படுவர்.

சிலபத்திரிகைகள் நவீன விடயங்களைமாத்திரம் அறிவிக்கின்றன. அதனல் யாவரும் பூரணமடையார்! ஏனெனின்; உலோகம் பலவிதம்! சிலர் நவீனவிடயங்களை அறியவிரும்புவர்! சிலர் கல்வியை விரும்புவர்! சிலர் ஆசாரங்களை விரும்புவர்! சிலர் சமயங்களை விரும்புவர்! சிலர் அரசியலை விரும்புவர்! சிலர் நீதியை விரும்புவர்! சிலர் கதைகளை விரும்புவர்! சிலர் தத்துவ சாஸ்திரங்களை விரும்புவர்! சிலர் இலக்கியலக்கணங்களை விரும்புவர்! இப்படி அறிய விரும்புவோர் பல திறத்தாராதலிற் பலவிடயங்கள் அமைந்திருத்தல் பத்திரிகையைப் பலருங்கொள்ளுதற்குக் காரணமாகும்.

பலதிற விருப்பமுடையாருள்ளும் பத்திரிகை வாயிலாக ஆங்காங்கு நிகழும் ஆச்சரிய நவீனங்களை அறிய விரும்புவோர் அநேகருளர்! ஆதலால் நவீனவிடயங்களை உள்ளபடி ஆராய்ந்து மெல்லிய சொல்லமைந்த வாக்கிய வாயிலாக விளக்கமுஞ் சுருக்கமுமேவ அறிவித்தலும் பத்திரிகைக்கு ஆவசியகம்.

பலதிறக் கல்விகளையும் போதித்து அறிவை விளக்கிவருதல் பத்திரிகைக்கு அத்தியாவசியகமாகும். கல்வியைக் கற்பித்தல் செய்யாது அறிவை விளக்குதலாதமா! அறியாமை நீங்குமா! தத்துவஞானந் தலைப்படுமா! சிற்றுயிர்க்குற்றதுணையாக மாநுடரால் அவசியம் அடைதற்பாலனவாகிய அறம்பொருளின்பங்களும் அப்பாலதாகிய வீட்டுலகும் அடையப்படுமா!

நான்மணிக்கடிகை.

கற்கக் கழிமிட மஃகு மடமஃகக்
குற்றந்தீர்ந் திவ்வுலகிற் கோளுணருங் கோளுணர்ந்தாற்
றத்துவ மாய நெறிபடரு மந்நெறி
இப்பா லுலகத் திசைநிறீஇ யப்பால்
உயர்ந்த வுலகம் புகும்.

நீதிநெறி விளக்கம்.

அறம்பொரு ளின்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையு நாட்டும்—உறுங்கவலொன்
றுற்றுழியுங் கைகொடுக்குங் கல்வியி னூங்கில்லைச்
சிற்றுயிர்க் குற்ற துணை.

பொதுவான ஆசாரங்களையும் வருண நிலைகளுக்குரிய ஆசாரங்களையும் அறிவித்தலும் பத்திரிகைக்கு அழகாகும்.

ஆசாரக்கோவை.

நன்றி யறிதல் பொறையுடைமை யின்சொல்லோ
டின்னாத வெவ்வுயிர்க்குஞ் செய்யாமை கல்வியோ
டொப்புர வாற்ற வறித லறிவுடைமை
நல்லினத் தாரோடு நட்ட லிவையெட்டுஞ்
சொல்லிய வாசார வித்து.

பிராசீந சமயங்களும் ஆதுநிகசமயங்களுமாகச் சமயங்கள் எத்தனையோ பலவாக விளங்குகின்றன. பிராசீநம்-முற்காலத்தது. ஆதுநிகம்-இக்காலத்தது. இவ்வாறாய சமயங்களையும், இவற்றாற் கூறப்படும் கடவுள்முதலிய பதார்த்தங்களையும், பிறவற்றையுங்காட்டி உண்மை இதுவென அறிவித்தல் மெய்ச்சமயவறிவு விளங்குதற்குக் காரணமாகும்! மற்றை அரசியன் முதலியனவும் அறிவித்தற்குரியனவாகும்.

வழக்கில் வாராத திரிசொற்களையும், வழூச்சொற்களையும் விலக்குதலும், நற்சொற்களையும் நற்பொருள்களையுந் துலக்குதலும், பிறவும் பத்திரிகைக்குப்பேரழகாகும்.

திருக்குறள்.

கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாஞ்சொல்.

தமிழ் நூலாராய்ச்சி.

தமிழ் என்பது வேங்கட மலைக்குத் தெற்கே தென்கடல் கீழ்கடல் மேல்கடல்களுக்கிடையிலுள்ள நாட்டிலே வழங்கிவரும் ஒரு பாஷையாகும். இது, "நெடியோன் குன்றமுந் தொடியோள் பௌவமுந் தமிழ் வரம்பறுத்த" என்னுஞ் சிலப்பதிகாரத்தானும், தொல்காப்பியப் பொருளதிகாரத்திலே "வழியெனப்படுவது" என்னுஞ் சூத்திரவுரையிலே நச்சினார்க்கினியர் காட்டிய "வடதிசை மருங்கின் வடுகு வரம்பாகத்-தென்றிசையுள்ளிட் டெஞ்சிய மூன்றும்-வரைமருள் புணரியொடு கரைபொருது கிடந்த-நாட்டியல் வழக்க நான்மையின்" என்னும் எடுத்துக்காட்டினானும் இனிது காட்டப்படும்.

தமிழ் என்னும் இச்சொற்கு முடிபும், பொருளும் பலரும் பலவாறு கூறுவர்! பழைய நூலுரையாசிரியர்கள் இதன் முடிபு யாதுங் கூறினாரல்லர்! பிரயோக விவேக நூலுடையார் "திரமிளம் என்னும் ஆரியச்சொல் தமிழ் எனத் திரிந்தது" என்பர்! வேறு சிலர் அதற்கு அதியாலை

லை நீக்குவது எனப்பொருள் கூறுவர். வேறு சிலர் தமி என்னும் வினையடியாற் பிறந்து ழகரமெய் பெற்றுத் தமிழ் என வந்தது எனவும், தனக்கிணையில்லாத பாஷை என்பதே அதன் பொருள் எனவுங் கூறுவர்! வேறு சிலர் இனிமை என்னும் பொருளுணர்த்துந் தமிழ் என்னுஞ் சொல் ஆகு பெயராய்ப் பாஷைக்குப் பெயராயிற்றெனவும், இனிய மொழி என்பதே அதன் பொருள் எனவுங் கூறுவர்! சிறப்புப் பெயர்களுக்கு விவரணங் கூறும் நூலாகிய "அபிதானகோசம்" செய்த ஆசிரியராகிய யாழ்ப்பாணம் ஸ்ரீமத். ஆ. முத்துத்தம்பிப்பிள்ளையவர்கள் தமிழ் என்னுஞ் சொல் ஆரியத்திலேசென்று திராமிளம்என வழங்கப்பட்டது என்று கூறி அதன் வரலாறுங் கூறுவர்! தமிழ் என்னுஞ் சொல் இவர்கள் கூறுமாறு காரணக்குறியாயினுமாக! இடுகுறியாயினுமாக! எவ்வாறாயினுமாக!

இத்தமிழ்மொழி இத்தென்னாட்டில் வழங்குங் காரணம்பற்றித் தென்மொழி எனவும் பெயர்பெறும். வடதிசை நின்று வந்தமை பற்றி ஆரியம் வடமொழி எனப் பெயர்பெறும்.

இத்தமிழ்மொழி சிவபிரானாலும் முருகபிரானாலும் அகத்திய முனிவருக்கு இலக்கணத்தோடும் உபதேசிக்கப்பட்டது. வீரசோழியப் பாயிரகாரர் "ஆயுங்குணத்தவலோகிதன் பக்கலகத்தியன் கேட்-டேயும்புவனிக்கியம்பிய தண்டமிழ்" என்பர்.

அகத்திய முனிவர் இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழும் விளங்குமாறு ஒரு நூல் செய்ததன்றித் தொல்காப்பியர் முதலியோர்க்குந் தமிழ்மொழியை அறிவுறுத்தினர். அகத்தியராலே தமிழ்மொழி எங்கும் பிரகாசித்தது.

வெண்பா.

ஒங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி
எங்கொலிநீர் ஞாலத் திருளகற்றும்—ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன் றேனையது
தன்னே ரிலாத தமிழ்.

இத்தமிழ்மொழி பாண்டியர்களாலே தாபிக்கப்பட்ட தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என்னும் முச்சங்கங்களிலும் நன்காராயப்பட்டு வளர்ந்து வந்தது. இந்த மூன்று சங்கங்களிலும் எத்தனையோ நூல்கள் செய்யப்பட்டன! அவைகளெல்லாம் அழிந்தொழிந்தன! தொல்காப்பியமும் இடைச்சங்க நூல்கள் சிலவும் அழியாது வழங்கப்படுகின்றன. பின்னும் பலராலும் பல நூல்கள் செய்யப்பட்டன. தேறுந் தோறும் இனிமைபயக்கும் இத்தமிழ் நூல்களை ஆராய்ந்து வளர்த்தல் தமிழ் நாட்டாருக்குப் பெருங் கடனாகும்.

தருக்கம்.

அவதாரிகை.

1. *தருக்கம்* என்பது உண்மையைப்பற்றிய கோட்பாடுகளும் விதிகளும் அடங்கியுள்ளது.*

தருக்கத்தின் இயல்பையும், நோக்கத்தையும், பிரயோசனத்தையுங் குறித்து பின் விரிவாய் எழுதப்போவதனால் இங்கு அதனை இவ்வளவு பொதுமையில் கூறியதே போதுமென நினைக்கின்றேன். தருக்கம் என்னும் சாஸ்திரத்தினை§ விளக்குமுன் அதனை உய்த்துணருவதற்கு இன்

---

* வேதாங்கங்களிலொன்றாகிய வடமொழித் தருக்கத்திற்கும் ஐரோப்பியரிடை வழங்கிவரும் தருக்கத்திற்கும் இருக்கும் வேற்றுமை சிறிதன்று. ஐரோப்பிய தர்க்கசாஸ்திரிகளில் பிரபலம்படைத்த டாக்டர் பெயின் என்பவரது தருக்கநூலை அவசியமான சிற்சில மாற்றங்களுடன் தமிழ்ப்படுத்தத்தொடங்கியிருக்கின்றேன். இம்முயற்சி முற்றுப்பெறுமாயின் வடமொழித் தருக்கத்தினையும் பின்னர் ஒருவாறு விளக்கி, இவை இரண்டிற்குமமைந்த ஒற்றுமை வேற்றுமைகளை இயன்றமட்டிலும் எடுத்துக்காட்ட முயலுதலும் எனது கருத்து.

§ 'ஸயன்ஸ்' (Science) என்னும் ஆங்கிலேய மொழிக்கு சாஸ்திரம் என்னுமொழியே சரியான பிரதிபதம். 'ஆறுசாஸ்திரம்' என்னும் பழய பாகுபாட்டில் சாஸ்திரம் என்ற மொழி இவ்வர்த்தம் பயவாதாயினும், அதனை ஓர்புறம் சுருக்கி ஓர்புறம் விரிக்கின் 'ஸயன்ஸ்' என்னும் வாக்கின் பொருளைத் தரும். மேலும் இம்மொழியினை இங்ஙனம் வரையறுத்துப் பிரயோகிக்க இரண்டு காரணங்களுள:— (1) Science-க்கு பிரதிபதமாகச் சிலரால் கொண்டுவரப்படும் நூல் என்னும் தமிழ்மொழி சிலசமயம் புத்தகம் என்று பொருள்படுகின்றது; சிலசமயம் எவ்வித பிரபந்தங்களையும் உணர்த்துகின்றது. இப்பொருளில் யாப்பருங்காரிகையும் ஒரு நூலே. "சதுர்வேதமுதல் பல்லியின் குரல் முதலியவற்றால் நேரிடுகிறவைகளைத் தெரிவிக்கும் பல்விசாத்திரம்வரை கற்கக்கூடிய எல்லாவற்றிற்கும் நூல் என்னும் தமிழ்ப்பெயர் பொருத்தமுடையதாக இருக்கின்றது" என்று காலஞ்சென்ற யம். எ. சுந்தரம்பிள்ளையவர்கள் தமது "நூற்றொகை விளக்க"த்தில் கூறுவதனாலேயே நூல் என்னும் மொழியின்

நியமையாதனவான சில விஷயங்களை இந்த அவதாரிகையில் எடுத்துச் சுருக்கிப்பேசலவசியம். அவையாவன:—

(1) தருக்கத்திற்கு ஆதாரமானசிலமானதசாஸ்திரக்கொள்கைகள்.
(2) தருக்கத்தின் மூல நியதிகள்.
(3) சாஸ்திரங்களின் பாகு பாடு.
(4) தருக்கத்தின் விஷய வரையறை.
(5) தருக்கத்தின் வகுப்புகள்.

மானதசாஸ்திரக்கொள்கைகளினால் தருக்கத்தின் அத்திவாரம் இன்னதென அறிவோம்; அக்கொள்கைகளினின்றும் பெறப்படும் சில மூல நியதிகளினால் தருக்கத்தின் பொதுவியல்பு இத்தன்மையதென்று புலப்படும்; அம்மூல நியதிகளை ஒட்டிய சாஸ்திரப்பாகுபாட்டினால் ஏனையசாஸ்திரங்களோடு தருக்கத்திற்கும் சம்பந்தம்வெளியாகும்; சாஸ்திரப்பாகுபாட்டில் ஏற்படும் விஷயவரையறையினால் தருக்கத்தின் விஷயம் நிர்ணயிக்கப்படும்; அவ்விஷயவரையறையில் வந்தசாஸ்திரத்தை வகுக்கில் அதன் உட்பிரிவுகள் தோன்றாநிற்கும். அதுபற்றி, மேற்குறித்த ஐந்து விஷயங்களையும் முறையே பீடிகையாக இங்கு கவனிப்போம்.

(1) தருக்கத்திற்கு ஆதாரமான சில மானத சாஸ்திரக் கொள்கைகள்.

2. தருக்கம் எவரால் எவ்விதமாய் எண்ணப்படினும் மனதின் தொழில்களையும், அத்தொழிலினின்றும் வெளியாகும் பிரமாணங்களையும் எடுத்துக்காட்டியே நிற்கும்; தருக்கம் எத்துணை விரிகின்றதோ அத்துணை தருக்கத்திற்கு வேண்டிய மானதசாஸ்திரக்கொள்கைகளும் விரியுமென்பது உண்மை.

முற்காலத்திலேயே உற்பத்தியாகி கையாளப்பட்டுவந்த அநுமிததர்க்கத்திலும்* மனத்தொழில் பலவற்றுள், ஒருபொருளை உணரும் 'அறிதல்'1 பலபொருள்களின் பொதுக்குணங்களைப்பிரித்து பொதுக்கருத்

பொருள் வரையறுத்ததன்றென வெளியாகின்றது. (2) Scientific, Scientifically எனும் பெயர்வினை விசேடணங்கள் Science என்னுமொழியினின்றும் பெறப்படுவதுபோல, சாஸ்திரீக, சாஸ்திரகமாய், என்னும் விசேடணங்களையும் சாஸ்திரமென்ற சொல்லினின்றும் பெறலாம். நூல் என்னும் தமிழ்மொழி இதற்கிடங்கொடுப்பதன்று.

* Deductive Logic.
1. Perception or simple Apprehension.

துகளாக்கும்[a] 'கருதல்'[2] இக்கருத்துகள் இரண்டினை இணைத்து 'வாக்கியம்'[3] ஒன்று உண்டுபண்ணும் 'நிர்ணயம்'[4] வாக்கியங்கள் இரண்டிலிருந்து ஓர் முடிவினை அநுமிதிக்கும் 'ஊகம்'[5] முதலிய பல மனத்தத்துவங்கள் ஆங்காங்கு பேசப்படாமலிருக்கவில்லை.

தற்காலத்தில் உண்டுபண்ணப்பட்டு சாஸ்திரீகவுண்மை ஆராய்ச்சிக்கு மிக்க உதவிபுரிந்துவரும் நிதானதர்க்கத்திலும்[§] உலகசம்பவம் ஒவ்வொன்றினும் காரணமுளதென்னும் காரணப்பிரமாணத்தைக்குறித்த நமது அபிப்பிராயங்களும், நமது அறிவின் உற்பத்தி (அதாவது அறிவு மனதில் இயற்கையாகவே இருப்பதோ, அன்றி உலகானுபவத்தினால் வருவதோ என்னுங்கேள்வி)யும் விளக்கப்படுகின்றன.

இவ்விதம் அநுமித தருக்கத்திற்கும் நிதான தருக்கத்திற்கும் மானத சாஸ்திரக் கொள்கைகள் சில வேண்டுமாதலால், அவைகளை தொடக்கத்தில் தொகுத்துக் கூறுதல் மிகவும் நன்று. இதனால் தருக்கத்தின் முறைகளும் விதிகளும் எளிதில் புலப்படுமென்பது உறுதி.

2. முதன்முதல், நாம் உணரவேண்டுமாயின் நமது உணர்ச்சி நரம்புகளில் வெளிப்பொருள்களால் பதிக்கப்படும் பதிவுகளும்* மாறவேண்டும். இதனால் எல்லா உணர்ச்சிகளும் இருபுறமுடையனவென்று கூறலாம்; அதாவது வெளிப்பொருள்கள் செய்யும் பதிவு, அதினின்றும் வேற்றுமைப்பட்ட வேறொரு பதிவுவந்தால் மட்டிலும், உணர்ச்சிக்கு ஏதுவாகும். இதனையே மானதசாஸ்திரிகள் வேற்றுமைப்பிரமாணம் என்று கூறுவர்.

---

a. Notions or general ideas.
2. Abstraction.
3. Proposition.
4. Judgment.
5. Reasoning.
§ Inductive Logic.
* Impressions; உணர்ச்சிக்குக் காரணமாக வெளிப்பொருள்கள் நமது இந்திரிய நரம்புகளில் (புலநாடிகளில்) செய்யும் மாற்றத்திற்கு "பதிவு" என்பது மானதசாஸ்திரத்தின் சங்கேதப்பெயர். இந்நூலில் பதிவு என்னுமொழி இப்பொருளிலேயே பிரயோகப்படுத்தப்படும்.

பிரபஞ்சத்திலிருக்கும் பொருள்கள் யாவும் மனிதரின் இந்திரியங்களில் அமைந்துகிடக்கும் நரம்புகளின்மேல் தாக்க உண்டாகும் அந்நரம்புகளின் ஓர்வித இயக்கத்தினால் மனதில் அப்பொருள்களைக்குறித்த அறிவு பிறக்கின்றதென்பது மானதசாஸ்திரத்தின் முதற்கொள்கை. ஆயினும் ஒரு பொருள் ஒரேவிதப்பதிவை நரம்பில் அழுத்திக்கொண்டிருக்குமாயின் அந்தப் பதிவானது அறியப்படாமல் போமென்பதும் திண்ணம்; அப்பதிவை அறியவேண்டுமாயின் வேறோர் பதிவும் வேண்டும். எவ்வளவுமட்டும் பின்னிகழும் பதிவானது முன்னிகழ்ந்த பதிவில் நின்றும் வேறுபடுகின்றதோ அவ்வளவுமட்டும் அறிவின் தெளிவும் பெருகும். சாதாரணமாகிய காற்று எக்காலத்தும், எல்லா இடத்தும் நம்முடைய தேகத்தில் பதிவு செய்வதனால் அதனை நாம் உணருகின்றோமில்லை; கடலோரத்திலேயே வசிக்கும் பரதவருக்குக் கடலோசை புலப்படமாட்டாது; ஆனால் காற்றானது மிகுந்த குளிர்ச்சியாகவோ உஷ்ணமாகவோ நம்மீது வீசுமானால் நாம் அதை அறிகின்றோம்; கடலில் ஓசை மிகவுங் குறையுமாயினும் அல்லது அதிகம் கூடுமாயினும் பரதவன் அறிகின்றான். கடலோரம் வசித்த ஒரு மனிதன் உள்நாட்டுக்கு வந்த முதல்இரவில் தூக்கமில்லாது வருந்த, பின் கடலோசைபோன்ற பேரொலி உண்டுபண்ணும் யந்திரம் ஒன்று நான் படுக்குமறையின் பக்கத்தறையில் வைக்கத் தூங்கினானென்று கூறுவதும் நம்பத்தக்கதே. மேலும், எவ்வளவு சடுதியில் ஒருநிலையினின்று, அந்நிலையினின்று முற்றும் வேறுபட்ட மற்றொரு நிலைக்கு மாறுகின்றோமோ அவ்வளவு அதிகம் அம்மாற்றத்தினை நாம் உணருவோம். இருட்டறையிலே நெடுநாளாக வசித்த ஒருவனுக்கு தான் சூரிய வெளிச்சத்தைக் காணு முதல் நாளும், தாகத்தினால் தொண்டை வறண்ட ஒருவனுக்கு தான் சாப்பிடும் முதல் "முடக்கு"த்தண்ணீரும், தரித்திரத்திலழுந்திக்கிடந்த ஒருவனுக்கு தான் புதையல் கண்ட முதல்நாளும் மிக்க பலமான உணர்ச்சியைக் கொடுத்திருக்குமென்பதில் எட்டுணையேனும் சந்தேகமில்லை.

ஆகையினால் நமது பொறிகளுக்குரித்தான வஸ்துக்கள் நம்மீது பதிவுசெய்வதிலிருந்துமட்டும் நாம் எவ்வாறு உணருகின்றோமென்று கணிக்க முடியாது. பின்வந்த பதிவின் உணர்ச்சி முன்னிருந்த பதிவினை ஒட்டிநிற்கின்றது; அதுபோன்றே முன்னிகழ்ந்த அனுபவ உணர்ச்சியும் பின்தொடரும் அனுபவ உணர்ச்சியைச் சார்ந்திருக்கின்றது. ஒரு மனிதனுக்கு 10000 ரூபா இன்று இருக்கின்றதென்பதை மாத்திரம் வைத்து அவனது உணர்ச்சி இன்னவாறுதானிருக்கவேண்டுமென்று அனுமானிக்க முடியாது. நேற்றைத்தினம் அவன்பால் லக்ஷ ரூபாயிருந்து இன்று 10000

உலகத்திற் றேடப் புகுவோன் தனக்குள்ள ஓர் குறையைப் புறம்விடுவான். அழகாலாய கூட்டில் அறிவுமன்பும் இணைபிரியாத தவனிடமே.

சோம— அவனை உயர்த்திப் பேசுகின்றீர்.

தீனக— அவனுக்குள் ளவனை விரித்துரைத்தேன்: அவன்றன் மதிப்பைத் தருமாறுரைக்க வலியிலனாய் அதனைக் குறுகத்தறித்தேன்.

சோம— அவன் பெயரும் பிறப்பும் என்ன?

தீனக— அவன்றன் சரிதம் முழுவதும் நான் அறியேன்: எனினும், தெரிந்துரைப்பேன்; அவன் றந்தை கூர்ச்சரநாட் டரசன் மதோன்மத்தனென்பார்; அவருக்கிவனொழித் தாண் மக்கள் இருவரிருந்தார். அந்நாள் வந்த போரில் அவர் உயிர்துறந்தார்; மக்கள்மேல் வாஞ்சைகொண்ட பிதாவுமதைக் கேட்டுடன் ஏங்கியிறந்தார்; அவர்கண் ணனைய பத்னி நான் குறித்துச்சொன்ன செல்வனை யீன்றவுடன் மக்களும் கணவரும் போனதை யெண்ணி, மனந்தரியாது, அவரைப் பின்பற்றினாள். அதன்மேல் அந்நாட்டிற் சில குறும்பர் கிளம்பித் தலையற்றநாட்டைப் பிடிக்குந் துணிவுகொண்டு கலகமிட்டார்; அதிற்றேர்ந்த தும்ராக்கனென்போன் தனக்கே திருமுடிசூட்டிக்கொண்டான். அக்குழந்தை அரசினுக்கு நேரா முரிமையுடையதென் றஞ்சி அதனைக்கொல்ல முயன்றும் தடைப்பட்டு, நாட்டுக்கப்பாலுள்ள ஓர் வனத்தில் அதைக்கொண் டெறிந்துவர விடுத்தான். இங்ஙனம் நமது காட்டிற்கிடந்த அருமைக்குழந்தையை நம் அரசன் கண்டு, பரிந்தெடுத்து, அன்பாய்வளர்த்து, மதனனென்ற திருநாமமிட்டு, சகல கலையும் பயிற்றுவித்துத் தன் தோழனாக எடுத்துக்கொண்டார். அவனோ மனிதர் காற்றை யுட்கொள்ளுவதுபோல் அக்கல்வி புகட்டுவித்த விரைவோடுணர்ந்து, மூளையில் விளைவுற்று, அரண்மனையில் வாழ்ந்து, உச்சிமேல் யாவராலும் அன்போடு கொண்டாடப் பெற்றுச் சிறுவர்க் கிலக்கணமாய், முதியோருக்கு அவரிளமை யுருத்தோன்றியபளிங்காய், கிழவர்க்கு அவர்கைக்கொருகோல் கொடுத்து நடாத்துந்துணையாய், இப்போது அவன் நாடு விட்டுப்

போமாறவன் கொண்ட தையலுக்கோ, அவன் எம்மதிப்பும்
எத்தன்மையும் பெற நின்றுளன அவள் தன்விலேயே
விளக்கும்; அவள் தெரிந்தேற்கப் பெற்றுளொருவன் எத்தரம்
உடையானென் றுண்மைதுலங்கும்.

சோம— நீர் கூறிய பேச்சிலிருந்
தவனைக் கனம்செய்கின்றேன். ஆகில், சொல்லும், அரசனுக்கிம்
மகளன்றி வேறு மகவில்லையோ?

தீனக— இவளே மகளாம்'
இரண்டு குமாரரவர்க்கிருந்தார்; அதைச் சொல்லவென்றால்,
கேளும், சொல்வேன். அவருள் மூத்தவன் முப்பருவத்திலும்
தவழும் பருவத்தில் மற்றவனும் களவாடப்பட்டார்;
இந்நாள்வரைக்கு அவர் எவ்வழி போயினரென்று அறிவுக்
கெட்டவில்லை.

சோம— இஃதெத்தனை காலத்திலுக்கு முந்தி?

தீனக— ஏறக்குறைய இருபஃதாண்டு.

சோம— அரசன் மகவை
அவ்வாறு கொண்டு செல்லும்படி, காவலிருந்த வலி
யென்ன, பின் போக்கிய தேட்டத்தின் வேகந்தானென்ன!

தீனக— அது
எவ்வளவு வியப்பாகிலும், ஆசட்டை எவ்வளவு
நகைக்கிடமாகினும், அய்யா, அஃதுண்மையே.

சோம— உம்மை நான்
நன்றாக நம்புகின்றேன்.

தீனக— பேச்சு நாம் விடவேண்டும்: இதோ
குறித்த சீமானும், அரசியும், ராஜ குமாரியும் வந்
தடைந்தார்

இருவரும் போக

அரசியும், மதனனும், சத்தியவதியும்

பிரவேசிக்க.

அரசி— இல்லை, மகளே, மற்றைப்பெண்களைப்போலப் பழி
கொள்ளேன். என் சக்கழுத்தி மகளென்று உன்மேல் நான்
கொள்ளிக்கண்
காட்டேனெனத்திடங்கொள்வாய். நீ என்வசமேசிறைகொண்

டிருக்கினும், உன்னைத் தடையும்தாழ்க்கோலே நான்உன்னிடமே தருவேன்; உனக்கு, மதனா, சினங்கொண்ட மன்னனை நான் என் வசமாக்கிய அக்கணமே, உன் பக்ஷம் நின்று நான் யாரும் அறிந்திடப் பேசுவன்: தெய்வம் அறிய, இன்னும் உள்ளே அவருக்குச் சிறிதே கோபமுண்டு; ஆகையினால் அவரிட்ட தண்டனையை நீ விவேகத்தினால் உணர்ந்து பொறுப்பதே நன்று.

மதனன்— அரசித்தாயே, நான் இன்று இவிடம்விட்டுப் போவேன்.

அரசி— அன்றேல், அதனால் வரும் மோசம் அறிவையே. நம் அரசனே நீங்கள் கலந் துரையாடல் படாதென்று ஆணை செய்தார் என்றாலும், விலக்குறும் அன்புபடும் கொதிப்புக் கிரங்கி, இந் நந்தவனம் ஒன்று சுற்றிவருவனிதோ.

(போக)

சத்தி— அட, புரட்டாதரவே! இந்த நீலி கடித்தவிடம் தினவெடுக்கச் செய்யும் சேர்த்திதானென்ன! என் கண் ணிறைந்த காதலனே, என்தந்தையின் கோபம் சற்றஞ்சினேன்; அதனால் என்பாற் செயப்படும் துன்பால் ஒன்றில்லை—என் துயகடன் எப்போதும் ஆற்றப்பொறுத்தேன்—நீர் போகவே வேண்டும்; இங்கே [நீர்] சிறிடும் கண்ணெறி எந்நேரமுங் கொண்டு இவ்வாழ்க்கையில் ஆதரவில்லை யென்றாலும், உலகில்இம்மாணிக்கத்தை மீளவும்காணப்பெறலாமென்றேஎண்ணிப்பொறுத்திருப்பேன்.

மதனன்— என்னரசி! என் கண்ணாட்டி! மாதே அழேல், நீ அழுதால், ஆடவருக்கழகல்லா அளவெனக்கும் உருக்க முண்டென வையமுறலாகும். கைபிடித்தாளையிட்டோர் எவரிலும் நேயம் விடாதிருப்பேன்; இனி நான் மகத நாட்டில் என் தந்தையின் நண்பன் எனக்குக் கடிதத்தினால் அறிமுகமான சாதனந்தன் என்ற ஒருவனிடம் நான் தங்குவேன். என்னரசி, அவிடம் குறித்தெனக்கு நீ கடிதம்விடுவாயாகில், நான் உன்மொழியமுதம் கண்ணூற் பருகி அகமகிழ்வேன்

அரசி மறுபடி பிரவேசிக்க,

அரசி— சுறுக்காயிருங்கள்: அரசன் வருவரேயாகில் இதற்கென்னை எவ்வளவு

கடிந்துகொள்வாரோ அறியேன் (தனக்கு) என்றாலும் அவரை இந்த
வழியேவரத் தூண்டுவேன்: நான் அவர்க்கொரு தீங்குசெய்வ
தில்லை; அவரே என் சினேகத்திற்காக என் தீமைகளை
விலைகொள்ளுவார்; வட்டி தீர்த்தென் குறைகளை வாங்கிக்
கொள்வார். (போக)

மதன— நமக்கினி வாழ்வுள்ள நாட்களெல்லாம் விடைகேட்டுநிற்போ
மாகிலும், நம்பிரிவாற்றுமையே வளரும். செல்கின்றேன்!

சத்தி— இல்லை, சற்றே நிற்பீர்; ஏன், நீர் உலாவப்போனாலும், ஐயோ
இவ்வாறகலல் தகுமோ? கண்ணாளனே, பாரும் இதோ—
அன்னையின் வைரமிதை, நீர் எடுத்துக்கொள்வீர், அன்பனே:
ஆகில், இச்சத்தியவதி யிறந் தின்னொரு தையலை நீர்
அணையுந்தனையும் அதை வைத்திரும்.

மதன— எப்படி! எப்படி!
மற்றொரு தையலென்றோ? இறைவா, நீ எனக்களிக்கும்
இம்மணிபோதும், மற்றொன்றையும் நான் இறந்து மணைய
வையேல். (மோதிரமணிந்து) இரு, என் புலனுள்ள நாளள
வும் விரல்மேல்
உறைந்திரு நீ. கண்மயிலே, தேனே, உன் விலையறியா
உருவை எனக் களித்திட்ட உனக்கு நான் என் எளிய
வாக்கை கைம்மாறு கொடுக்கின்றவாறு, நம் சிறு பொருள்க
ளுள்ளும் நான் நின்னிடம் பெற்றதே பேறு; எனக்காக இதை
அணிந்துகொள்வாய்; அன்புக்கோர் காப்பிஃது; இவ்வழ
கொளிரும்
சிறைமேல் அதனை வைப்பேன்.

சத்தி— அவள் கைமேல் ஓர்கங்கணத்தைவைத்து,
தெய்வமே! இனி என்று காண்போம்?

தனஞ்சயனும் பிரபுக்களும் பிரவேசிக்க.

மதன— ஐயோ, அரசனல்லோ!

தனஞ்— கேடுகெட்டவனே, ஒழி! என்
கண்ணிற்படாமல் வெளியே! இக்கட்டளையானபின்னும்
அரண்மனைக்குள்நின்றன் ஆபாசக்கட்டையைக்காட்டுவையேல்
செத்தாயடா: ஓடிப்போ! என் உதிரத்திற்கோர் நஞ்சு நீ.

மதன— தம்மைக் கடவுள் தலைகாக்க! தம்மையடுத்திருக்கும்
நல்லோரையும் அவர் வாழ்விக்க! நான் போகின்றேன்
(போக)

[இவ்விஷயம் பிர்ம்மஸ்ரீ கெ. ஜீ சேஷய்யர் பி. எ. பி. எல். அவர்கள் அக்கிராசனாதிபத்தியத்தின் கீழ் திருவனந்தைச் செந்தமிழ்க்கழகத்தில் மாசி மீ 6-உ வாசிக்கப்பட்டது.—ப—ர்.]

"ஆங்கிலேய அரசாங்க அமைப்பு."

'அருணன் ஒருபொழுதும் அஸ்தமிப்பதின்று' என்று சொல்லும்படி 40-கோடி ஜனங்களுக்குமேல் வசிக்கின்ற சற்றேறக்குறைய ஒரு கோடியே ௩௰-லக்ஷம் சதுரமைல் விஸ்தீரணமுடைய பூமியை இப்பூவுலகின்கண் பலவிடங்களிலுமுடையதாய் மிகு புகழ்பெற்றுவிளங்கும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமானது தற்காலம் ஏழாவது எட்வர்ட் (Edward VII) மகாராஜா அவர்கள், ஜனப்பிரதிநிதி சபை (House of Commons), பிரபுக்களின் சபை (House of Lords) என்ற முத்திறத்தினரா லாளப்பட்டுவருகின்றது. இம்முத்திறத்தினருங் கூடுகின்ற சபையே பாராள்மன்று அல்லது மகாமந்திரசபை (Parliament) எனப்படும். பொன்றுப்புகழையும், அளவற்ற செல்வத்தையும் ஆங்கிலேயருக்கீந்த இப்பார்லிமெண்டானது கி. பி. 1199-௵ முதல் 1216-௵ வரையு மரசாண்ட ஜான் என்ற ஒரு கொடுங்கோ லரசன்காலத்தி லேற்படுத்தப்பட்டது. ஜனங்கள் இவனது கொடுங்கோன்முறையை சகிக்கவாற்றாது, கலகஞ்செய்து, தங்கள் சுதந்திரங்களை வரையறுத்து அவைகளை அரசன் போற்றியொழுகும்படி அவனிடத்தில் ஒரு உறுதிப்பத்திரம் வாங்கினார்கள். இதுதான் பெரிய உடன்படிக்கை (Magnacharta) என்று சொல்லப்படுவது. அப்பத்திரத்தில் தேசப் பொதுச்சபையாரின் சம்மதமின்றி வரி ஏற்படுத்துவதில்லையென்று அரசனிடத்தில் உறுதிச்சொல் வாங்கினதற்கேற்ப, முதல்முதல் சில பிரபுக்களும் பெரிய குடித்தனக்காரரும் இச்சபைக்கு வரவழைக்கப்பட்டார்கள். இதையே அஸ்திவாரமாகக்கொண்டு அரசரால் ஜனங்களுக்கு பிற்காலத்திற் கிடைத்த சுதந்திரங்களுஞ்சேர்ந்து இப்பொழுதுள்ள பார்லிமெண்டு நாளடைவில் வளர்ந்திருக்கின்றது.

இனி, இச்சபையின் அங்கத்தினராய் ராஜாங்க நிர்வாகப் பொறுப்பை யேற்றிருக்கின்ற ஒவ்வொரு பிரிவினரையுந் தனித்தனிவிசாரிப்பாம்.

I. மகாராஜா அவர்கள்.

இ. பி. 1837-ம்வருடத்தில் நான்காவது வில்லியம் காலஞ்சென்ற பொழுது, தமக்கு அறுமூன்று (18) வயதாயிருந்தும், அவ்விளவயதிற் பட்டத்தை யேற்று, அதுமுதல் எவர்மாட்டும் அருந்தாயெனவே அன்பு புரிந்து உலகெங்கும் பரந்துகிடக்கின்ற தமது குடிகள் உளங்களிக்க "அடல்கொள்சேனை புடைசூழவும் அரசர் குழாங்கள் முடிதாழவும்" பெற்று கடல் சூழிவ்வுலகத்தை யாவரும் வியக்கும்படி ஒரு குடைக்கீழ் 63-வருடமாக ஆண்டுவந்த நம் விக்டோரியா சக்கரவர்த்தினி சென்ற ஜனவரி மாதம் 22-உயன்றிரவு இவ்வூனுடம்பை நீத்துப் புகழுடம் படைந்ததாக வந்தசெய்தி இன்னும் நமது ஞாபகத்தை விட்டகலவில்லையன்றோ! அதற்குப்பின் அவரது மூத்த குமாரராகிய ஆல்பர்ட் எட்வர்ட் என்பவர் அப்பெயருடைய ஆங்கிலேய அரசரில் ஏழாவது அரசராய் அம்மாதம் 23-உயன்றே பட்டத்தை யேற்று அரசாட்சி நடத்தி வருகின்றனர். மகாராணியவர்க ளிறந்த துக்கம் முற்றிலும் ஆறுவதற்குமுன் இவர் சந்தோஷமாகப் பட்டத்தை யேற்றதென்னையோ! எனின் ஆங்கிலேய அரசாட்சியில் (Le Roi Est Morte Vive Le Roi = The King is dead; Long live the King) "அரசனிறந்துபோனான்; அரசன் பல்லாண்டு வாழ்க"—என்ற ஏற்பாட்டின்படி ஒரு அரசனிறந்தால், இன்னொருவர் பட்டத்தை யுடனே யடையவேண்டும்.

நம் புதுச்சக்கரவர்த்தி இப்பொழுதே பட்டத்துக்கு வந்திருப்பதால் அவரது குணாதிசயங்களைப்பற்றி இப்பொழுது யாம் சொல்வது சரியன்று. அன்றேனும் அவர் பலவிடங்களிலும் பேசிய வார்த்தைகளை ஆராய்ந்து நோக்குழி "கொடையளி செங்கோல் குடியோம்பனான்கு, முடையானும் வேந்தர்க்கொளி" என்பதற் கிலக்கணமாய், "அறம் பொருளின்பமான வறநெறிவழாமல்," "மறங்கடிந்தரசர்போற்ற" க்குடிதழீஇ க்கோலோச்சுவரென்றே எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்குச் சான்றாக, அவர் பேசியவார்த்தைகளிற் சிலவற்றை இங்குக் குறிப்பிடுகின்றாம்.

(1) 1875-ம் வருடத்தில் நம் சக்கரவர்த்தி (அக்காலத்தில் வேல்ஸ் இளவரசர்) இந்தியாவுக்குவந்து திரும்பிப் போகும்பொழுது, கவர்னர் ஜெனரலாயிருந்த லார்ட் நார்த்புருக்குக்கு (Lord Northbrook) கப்பலிலிருந்து விடுத்த ஓர் கடிதத்தில் அடியிற் கண்டபடி எழுதியிருக்கிறார், "இத்தேசத்து அரசர்கள் எனக்குச்செய்த உபசாரணைகள் என்றும் மறக்கத்தக்கவையல்ல. இந்நாட்டிலுள்ள கோடிக்கணக்கான பிரஜைகள் பிரிட்டிஷ் ஆட்சியிற் கிடைக்கும் லாபத்தையும் நன்மையுமெண்ணித் தங்கள் க்ஷேமத்திலேயே ஆங்கிலேயக் கவர்ண்மென்றார் கவனம் வைத்திருக்கின்றனர் என்றறியவேண்டுகிறேன்."

(2) சென்ற ஜனவரி மாதம் 23-உ மந்திராலோசனை சபையாரிடம் அடியிற் கண்டபடி பேசினர். "நம் தாயார் சென்றவழியே நாமும் நடந்து செங்கோல் செலுத்துவதே நமது இடைவிடாத முயற்சியாயிருப்பதுமன்றி, நமது உடம்பில் உயிருள்ள அளவும் நம் பிரஜைகளின் நன்மைக்காகவும் பெருக்கத்திற்காகவும் வேலைசெய்து எல்லா விஷயங்களிலும் அரச வரம்பு கடவாத அதிபராயிருக்கத் தீர்மானித்திருக்கிறோம்."

(3) மகாராணியவர்கள் இறந்ததனாலுண்டான துக்கத்தை ராஜப்பிரதிநிதியவர்கள் தமக்காகவும், இந்திய அரசர்களுக்காகவும், பிரஜைகளுக்காகவும், சக்கரவர்த்திக்குத் தந்திமூலம் தெரிவித்ததற்குப்பதிலாக அவரனுப்பிய தந்தியி லடியிற்கண்டபடி எழுதியிருக்கிறார். "யான் அரசாட்சியை ஏற்றுக்கொண்ட சமயத்தில், இந்தியர்கள் வந்தனஞ்செய்ததற்குப் பதிலாக, யான் சொன்ன மங்கலவசனத்தை, யான் நேர்ந்பார்த்தவர்களும், என்சிங்காசனத்தின்மீது அன்புள்ளவர்களென்று யான் முற்றிலும் நம்பியிருக்கிறவர்களுமான இந்திய ஜனங்களும் அரசர்களும் அறியும்படியாக நீவிர் வெளிப்படுத்தலாம். இந்திய ஜனங்களின் க்ஷேமமும் சந்தோஷமுமே நமக்கு எப்பொழுதும் பிரியத்தைக் கொடுத்துக்கொண்டிருக்கும்." இதிலுள்ள கடைசி வார்த்தைகள் யாம் முக்கியமாய்க் கவனிக்கத்தக்கவை. இவையெல்லாம் நற்சூசகமாகவே காணப்படுகின்றன.

கவர்ன்மென்று முக்கிய உத்தியோகஸ்தர்களெல்லாம் மகாராஜாவாலேயே நியமிக்கப்படுகிறார்கள். யுத்தம் ஆரம்பிக்கவும் யுத்தம் நடக்கும்பொழுது சமாதானங்கள் செய்யவும் உள்ள அதிகாரங்கள் அரசருக்கு உரிமையாயிருந்தபோதிலும் பின் சொல்லப்படும் ஜனப்பிரதிநிதி சபையாரின் (House of Commons) சம்மதமின்றி வரி ஏற்படுத்தவாவது பணம் செலவுசெய்யவாவது அதிகாரமில்லை.

II. பிரபுக்களின் சபை (House of Lords.)

இது ஏறக்குறைய 550-பிரபுக்களைக் கொண்டது. இவர்கள் புகழும் செல்வமும் பெற்றுள்ள மாசற்ற குடும்பங்களிற் பிறந்து உயர்ந்த பதவியையடைந்து இச்சபையின் அங்கத்தினராய் மகாராஜா அவர்களால் நியமிக்கப்படுபவர்கள். இவர்கள், பின்சொல்லப்படுகிற காமன்ஸ் சபையாரைப்போல அப்போதப்போது நியமிக்கப்படுபவரல்லர். ஒரு தடவை ஒருவர் லார்டு பதவியைப் பெற்றுவிட்டால் அவர் ஜீவபரியந்தம் அச்சபையின் அங்கத்தினராயிருக்கலாம். அவரிறந்ததும் அவரது மூத்த பிள்ளையும் லார்டு பட்டத்தைப் பெறுவர். லார்டு பட்டத்தைப் பெறாத மற்றப்பிள்ளைகளை மந்திரிகளின் வேண்டுகோளின்மேல் மகாராஜாவவர்கள் லார்டுகளாக நியமிக்கலாம்.

III. ஜனப்பிரதிநிதி சபை (House of Commons).

இது, இங்கிலண்டுக்கு (England) 465-ம், வேல்ஸ்க்கு (Wales) 30-ம், அயர்லாந்துக்கு (Ireland) 103-ம், ஸ்காட்லாந்துக்கு (Scotland) 72-ம். ஆக 670-பிரதிநிதிகளடங்கினது. இவர்கள், எக்குலத்தினராயினும், எத்தொழிலினராயினும், படிப்பினாலும், புத்திநுட்பத்தாலும், பெருந்தன்மையாலும் தேசாபிமானிகளெனப் பெயர்வாங்கி ஜனங்களாற் றெரிந்தெடுக்கப்படுபவர்கள். இவர்கள், ஜனங்களது ஏற்றத் தாழ்வு, நன்மை தீமைகளைத் தங்களுடையனவாகப் பாவித்து, அவர்களுடைய குறைகளை யெடுத்துச்சொல்லி அவைகளை நிவிர்த்திசெய்துகொடுக்கக் கடமைப்பட்டவர்கள். இவர்கள் நடுவுநிலைமை தவறி, தங்களுக்கு வேண்டியவைகளைச் செய்யவில்லையென்று ஜனங்களுக்குத் தோன்றினால், அடுத்தமுறை அச்சபைக்கு அங்கத்தினராயிருக்கும்படி ஜனங்களாற் றெரிந்தெடுக்கப்படக்கூடிய பெருமையை இழப்பதுமன்றி பலராலிகழவும்படுவர். தேச சம்பந்தமான எவ்விஷயங்களும் முதல்முதல் இச்சபையிலேயே ஆலோசனைசெய்யப்படும். இச்சபையின் அங்கத்தினர் நன்றாய்த்தர்க்கித்து, குற்றங்களையெல்லாம் நீக்கித்தெளிந்ததின்பின்னரே, தீர்மானரூபமாக எவ்விஷயமும் லார்ட்ஸ் சபைக்கனுப்பப்படும். அவர்கள் அங்கீகாரஞ்செய்ய மகாராஜா வவர்களும் அங்கீகரிப்பார்கள். இக்காமன்ஸ் சபையிலிருப்பவர்களே ஜனங்களது நன்மைதீமைகளைப்பற்றி முதல்முதல் வாதாடுகிறவர்களாதலால் அவர்களே ஜனங்களுக்கு அதிக நன்மைசெய்யச் சக்தியுடையவர்கள். ஒரு தடவை ஒருவர் காமன்ஸ் சபைக்கு அங்கத்தினராக நியமிக்கப்பட்டால் அக்காமன்ஸ் சபையானது மகாராஜா வவர்களாற் கலைக்கப்படுகிறவரையுமே அவர் அங்கத்தினராக இருக்கலாம். அங்ஙனம் கலைக்கப்படுவது இரண்டுவிதமாக நடைபெறுகின்றது.

(1) எந்தப் பார்லிமெண்டும் ஏழுவருட அளவே அதிகாரத்திலிருக்கலாமென்று சட்டமிருப்பதால் காமன்ஸ் சபையானது ஜனங்களால் நியமிக்கப்பட்டு ஏழுவருடங்களாய்விட்டால் புதிதான சபையை ஜனங்களைக்கொண்டு மகாராஜாவவர்களேற்படுத்துவதற்காக பழய சபை கலைக்கப்படும்.

(2) முக்கியமான விஷயங்களைப்பற்றி நூதனச் சட்டங்கள் செய்வதில் மந்திரிகளின் அபிப்பிராயத்தில் இச்சபையார் இணங்காதிருத்தல் கூடும். அப்பிணக்கானது அம்மந்திரிகள் இராச்சியபரிபாலனஞ்செய்வதில் ஜனப்பிரதிநிதிகளான இச்சபையாருக்குத் திருப்தியில்லை என்பதைத் தெள்ளிதிற்காட்டுவதால் அப்பேர்ப்பட்ட மந்திரிகள் ராஜாங்க

மத க்ஷமை.

இந்நிலவுலகின்கண்ணுள்ள ஜீவகோடிகள், வளர்தல் அழிதல் என்னு மிருவகைப் பொது விலக்கணங்களையுடைய மரவர்க்கமென்றும் உண்ணல் உமிழ்தல் ஈனுதல் இறத்தல் உறங்கல் உணர்தல் நடமாடல் முதலிய பல பொதுவிலக்கணங்களையுடைய மிருகவர்க்கமென்றும் இருவகையன. பின்னைய மிருகவர்க்கம் பகுத்தறிவற்ற விலங்கினம், பகுத்தறிவுடைய மனிதவினம் என இருவகைப்படுவன. 'பகுத்தறிவு' 'Reason' என்னுஞ் சிறப்பிலக்கணத்தின் காரியமான மனித விலங்கினங்களுக்குள்ள பேதா பேதம் பலவகைத்தென்பது பட்டப்பகல்போற் றெளிவானதே. இச்சிறப்பிலக்கணத்தின் காரணமாயுதித்த உறுப்புகளில் 'மதம்' 'ஜனசமுதாயம்' 'ராஜரீகம்' 'Religion' 'Society' 'Politics' என்பன மனிதஜாதிக் ந்ரிய உறுப்புகளிற் சிறந்தவை. அவற்றில் ஈண்டு எடுத்தாளப்படுவது முதலாவதான மதத்தின் ஓர் பாகமாகிய 'மத க்ஷமை'யே.

உள்ளதை யுள்ளதாயுணர்ந்து அதன்பா லொழுகி யுய்யக்கருது முயர்ந்தோர்க ளிவ்விஷயத்தை நன்காராய்வது, அவரது கடமைகளிற் றலைப்பட்டது.

இவ்வுலகின்கண் பற்பல தேயங்களிலுமுள்ள மனிதர்கள், பூர்வீகத்தில் நாகரீகமின்மையானும், சஞ்சாரத்திற்குரிய சாதனங்கள் பலவின்மையானும், ஜன நெருக்கத்தாலுண்டாகும் உணவு சேகரிக்குங் கஷ்டமின்மையானும், தத்தம் நாட்டிலே அடைபட்டு எட்டுத்திசையுந் திசைகட்டி மறைத்தாற்போற் றிக்குத்திசை தெரியாதவராய், தாம் வாழும் நாடே உலகமென்றுந் தாமனுசரித் தொழுகு மதமே உண்மை மதமென்று மெண்ணமுடையராய்,

"சமயகோடிகளெல்லாந் தன்றெய்வமென்றெய்வமென் றெங்குந் தொடர்ந்தெதிர்வழக்கிட நின்றது" ஒன்றே என அறியாதவராய், வேற்றுஜாதியாரைப்பற்றிக் கேள்வியுறினும் அவர் மிலேச்சரே யெனக்கொண்டிருந்தார்களென்பதும், தற்காலத்தில் நாகரீக மிகுதியாலும், நவீன யந்திரங்களுதவியாலும், ஜனநெருக்கத்தாலுண்டாகு முணவு சேகரிக்குங் கஷ்டத்தாலும், அறிவு முதிர்ச்சியாலும் ஜாதியாரெல்லோருந் தம் நாடுவிட்டுப் பிறதேயங்களுக்குப் போய்வந்தும், தங்கள் அபிப்பிராயங்களையும் அறிவுகளையும் பிறருக்குப் புகட்டியும், அவரிடமிருந்து

தாம் கற்றும், உலக யேற்றத்தில் தாம்தாம் முன்னிற்கவேணுமென்ற ஊக்கமுடையராய் வாழ்கின்றாரென்பதும், அதனாற் பல சச்சரவுகளுண்டாகின்றதென்பதும அச்சச்சரவுகளில் மதப்போர் ஒன்றென்பதும் அறிஞர் பலரும் அறிந்தவிஷயங்களே. இம்மதப்போரின் தன்மையை நன்காராய்ந்து அஃது குற்றமேல் அகற்றக்கருதி 'மதக்ஷமை' என்னும் விஷயத்தைக் கவனித்தலாவசியமே. அதினும் நாம்வாழும் இந்திய பூமியோ இந்நிலவுலகிற்கு ஓர் திலகம்போன்றதாய். எந்நாட்டிற்கும் முன்னரே அறிவில் முதிர்ந்ததாய், பலவகை வளங்களும், நிறைந்ததாய், எவ்வெவர் வரினும் அவ்வவர்க்குவேண்டி யாக்குட் பொருளிட்ட ஓர் கருவியாயிருத்தல்பற்றி தற்சமயம் பற்பல பாஷைகள் பேசியும் பல்வேறு மதங்களை அநுசரித்தும் வரும் நூற்றுக் கணக்கான ஜாதியார் நாடுமுழுதங் குடியேறி விரவிப்பரவி அற்றெறு மதப்போர் தினந்தினம் புரிதலால், நம்மவர் 'மதக்ஷமை' எனும் விஷயத்தைக் கையாடப்புகுதல் மிகப் பொருத்தமுடைத்தே. விஷயத்திற் புகுமுனம் 'மதக்ஷமை' என்பதின் பொருளை நன்கு கவனிப்பாம்.

ஒவ்வோர் நாட்டிற்குந் தோன்றுதொட்டு அநுசரித்துவருஞ்சமயம்பற்றியோ, அன்றி தற்சமயம் நாட்டின் பெரும்பாகத்தார் அநுசரித்துவருவதுபற்றியோ தேசமதமென வோர் மதமேற்படுகின்றது. இந்தியாவுக்கு இந்துமதமும், சீனாவுக்கு புத்தமதமும், அரேபியாவுக்கு மகம்மதியமதமும் இங்கிலாந்துக்கு கிறிஸ்துமதமும் தேசமதமென வேற்பட்டதுபோல ஒவ்வோர் நாட்டிற்கும் ஒவ்வோர் தேசமதமேற்படுகின்றது. தேசமதமென வோர் மதமேற்படுகின்றதெனவே அந்நாட்டில் ஏனைய மதஸ்தர்கள் இல்லையென்பதல்ல, ஏனையமதஸ்தர் பலரிருத்தல் ஸகஜமே. அவ்வேனைய மதஸ்தர் பலரும் தத்தமதத்தையும் அம்மதக் கோட்பாடுகளையும் இடையூறின்றி அநுசரிக்கவும் தம் மதத்தை பிறருக்குச் சாதாரணமாயுபதேசிக்கவும் தம்மதத்திற்கு விரோதமாய் பிறர்விடும் விவகார வின்ஞய் அறபட் டொழியத் தாமும் விவகார வின்ஞண் டெஞ்சஞ்சாது விடவுஞ் சுதந்தரமுடையராயிருக்க யிடங்கொடுத்தலே 'மதக்ஷமை' யெனப்படும். இச்சுதந்தரத்தினால் மற்றையோர் சுதந்தரத்தை யழிக்கவும், ஜனசமுதாயத்தின் நன்மைக்காக ஏற்பட்ட சட்டதிட்டங்களுக்கு மாறாக நடக்கவும் வன்மை ஏற்படவில்லை. இது நிற்க,

இனி, 'மதஹிம்சை' என்னும் அநிபாதக துர்க்குணம் நம்மவர்கட்குமட்டுமே உரித்தானதன்று. அது மானிடர் என்று பேர்படைத்த எச்சாதியார்க்கும் பூர்வந்தொட்டு உடன்பிறந்த வோரியற்கைக் குணமென்பதும் தற்காலம் பெரும்பான்மை கெட்டொழிந்துபோயிற்றென்

தைக் கேட்டுச் செல்வியாள் தாரைதாரையாய்க் கண்ணீர் சொரிந்தனள். அக்காலத்தில் யாத்திரைசெய்வது மிகவும் பிரயாசமான ஓர் செய்கையாம் என்றறிக. இக்காலத்தைப்போல் இராஜபாதைகளும் இருப்புப்பாதைகளும் மின்சாரத் தந்திகளும் கிடையாது. இக்காலத்தில் சாதாரண மனிதன் ஒருவன் நமது கோளத்தின் அடிப்பாங்கிலுள்ள நாடுகளுக்குப் போய்வருதற்கு எவ்வளவு பிரயாசைப்படுவனோ அதில் பதின்மடங்கதிகமான பிரயாசை ஓர்அரசன் தன்தேசத்திலிருந்து அயல்நாட்டிற்குப் போய்வருதற்குப் படவேண்டும். எவ்வெத் தேசங்கள் அரசனுக்குத் தெரியுமோ அவ்வத் தேசங்களுக்கெல்லாம் இவ்வரசகுமாரன் போகவேண்டியதென்றும் ஒவ்வோரிடத்திலும் அங்குள்ள நடைநொடி பாவனைகளனைத்தையும் அவன் முற்றிலுங் கற்றுத்தேருங் காலம் வரையிலும் அங்கிருந்து கழித்துப் பின்னரே அடுத்த நாட்டிற்குப் போகவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. அதற்கு எவ்வளவுகாலம் வேண்டிவந்தாலுஞ் சரி அதுவரையிலும் அங்கே இருக்கவேண்டும் என்பது அரசனது கட்டளை. ஆதலால் திரும்பித் தன்தேசத்திற்கு உக்கிரசேனன் வந்துசேரற்குப் பல வருஷஞ்செல்லும் என வெளியாயிற்று. அப்படியே ஒன்பதுவருஷங் கழிந்தபிற்பாடுதான் இவன் திரும்பித் தன்னூர் வந்தானென்று சரித்திரவாயிலாய் விளங்கும். செல்விநாட்டரசனுடன் முரணுடைய ஒருநாட்டிற்போய் அங்குத் தன் சாமர்த்தியத்தைக் காட்டத்தொடங்கினபடியினால் உக்கிரசேனன் அந்நாட்டில்சிறைப்படுத்தப்பட்டான். அச்சிறையினின்றும் தன்னை விடுவித்துக்கொண்டு வருவதற்கு வெகுநாள் வேண்டிவந்ததுடன் அவன் சிறைமீண்டு வருவதற்குள் அவனுடன் போயிருந்த பரிவாரங்களும் தம்மிடம் போய்ச் சேர்ந்தன.

இவன் தன்னூர் வந்து சேர்வதற்கு முன் செல்வியாள் யௌவனப் பருவம் அடைந்தனள் என்று முன்னர்க் கூறப்பட்டிருக்கிறது. அரசனும் வயதின் முதிர்ச்சியால் அரசாட்சியை ஒருவாறு முற்றிலும் தன் மந்திரியாகிய காலவன் கையில் ஒப்படைத்தனன் என்றே கூறலாம். அக்காலவன் பேராசை மிக்கவனாதலால் எவ்வளவு அதிகாரந் தனக்குக் கிடைத்தபோதிலும் இன்னும் அதிகமான அதிகாரம் நமக்குக் கிடைக்கவில்லையே என்று மனவருத்தப்பட்டுக்கொண்டு சிலநாளிருந்தான்.

இப்படியிருக்கையில் நிலவில்லாத ஓர் இரவில் காளைப்பருவம் வாய்ந்த பல வீரர்களால் கூடுண்ட ஓர் சேனை யாருக்குந் தெரியாமல் அரசனுடைய அரண்மனை முற்றத்தில் மெல்லமெல்ல புகுந்து பாளயம் இறங்

கிற்று. இச்சைன்னியம் காலவனாற் சேர்க்கப்பட்டது. அரண்மனை வாசலிற் காப்பாய்நின்ற படைவீரன் காலவனுடைய பிரீதிக்குரியவனாயிருந்திருத்தல்வேண்டும். இன்றேல் அச்சேனையை அவன் உள்ளிடம் புகச் சம்மதித்திரான் என்பது நிச்சயம். அகழிப் பாலத்தை அவனிட்டுக்கொடாதிருந்தால் அச்சேனை உட்புகுந்திருக்கமாட்டாது. முற்றத்திற் பாளையம் இறங்கின சேனை ஆயுதமேந்திய கையினராய் எப்பொழுது தம் எசமானனாகிய காலவன் என்ன கட்டளையிடப்போகிறான் என்று வேறு சிந்தைகள் அற்றவராய் உற்றுநோக்கிக்கொண்டு வீராவேசத்துடன் நின்றனர். அப்பொழுது காலவன் அரசனோடு அரசாட்சிமுறைமைகளைப்பற்றி வெகுநேரமாகச் சம்பாஷணைகள் செய்துகொண்டிருக்கின்றனன். இவ்வளவுநேரம் இதுவரையிலும் மந்திரி சம்பாஷணை செய்துகொண்டிருந்தது என்றும் இல்லை. கீழ் முற்றத்தில், வந்திருக்கும் சைன்னியத்தின் ஆயுதசாலத்தினுடையவும் வாய்மொழியினுடையவும் சப்தம் அரசன் செவியிற்பட உடனே அரசன் காலவனை உற்றுப் பார்த்தான். திடீரென்று சிங்காதனத்தை விட்டெழுந்திருந்தான்.

"இது என்ன சத்தம் இம்மனிதர்கள் யார்?" என்றானரசன்.

காலவன் அரசனைப் பரிகாசத்துடன் வணங்கி கொடிய புன்சிரிப்பொன்று சிரித்துக்கொண்டு "அரசனே இவர் என் மனிதர். என் கட்டளைப்படி இங்கு வந்திருக்கின்றனர்." என்றான். அரசன் மனங்கலங்கி ஒரு புன்சிரி எறிந்துகொண்டு

"செல்விநாட்டு மந்திரிக்கு இத்தனை சைன்னியம் ஏன்வேண்டும்?" என்றான்.

"ஆம்! நீங்கள் சொன்னது உண்மைதான். ஆயினும் அரசனுக் கித்தனை சைன்னியம் வேண்டியதுதானே?" என்று மந்திரி யுரைத்தான்.

அரசன் தன் புருவமிரண்டையும் சுளித்துக்கொண்டு மந்திரியை நோக்கி "பிரதானி! நீ சொன்னசொற்குப் பொருள் நன்குவிளங்கவில்லை! தெளிவாய்ச்சொல்! கேட்போம்!" என்றான். இதற்குப் பதிலொன்றும் சொல்லாமல், மந்திரி, அரசனுக்குச் செய்யும் மரியாதையை எல்லாம் ஒழித்துவிட்டு, நிமிர்ந்தவனாய் எதிர்நோக்கி, கோபத்துடன் அவன்மேற் பாய்ந்து சென்று, இருகண்களும் சிவக்க அரசனை நோக்கி, "ஏ வீரசிங்க! நின் வாழ்வு இன்றோடு முடிந்தது; இந்நிமிஷமுதல் இந்தச் சிங்காதனத்துக்குரியவன் வேறொருவன் என்றறி; நின் மனைவியிருக்குமிடத்திற்கு நீயுஞ்சென்று அவளுடன் சுகித்திருப்பாயாக!" என் சொல்லிவிட்டு மின்னல் பாய்வதுபோல் அரசன்மீது பாய்ந்தான்.

அரசன் இச்செய்கைக் கண்டுடனே சக்கிரகாரமாய்ச் சுழன்றுகொண்டு தன்னறையில் வைத்திருந்த தன் வாளையெடுக்கக் கருதி அத்திசைநோக்கி ஓடிச்செல்லக், காலவன் அவனைத் தடுத்தற்கென அவன் பின்னோடியவனைப் பிடித்துக்கொண்டான். அரசன் கூக்குரலிட்டாலு மிடுவன் என்று சந்தேகித்துக் காவலன் அரசனுடைய குரல்வளையை நெருக்கிப் பிடித்துக்கொண்டான். கிட்டி போட்டிறுக்கினாற்போல் ஒருவனையொருவன் இறுகக்கட்டி யுருட்டியும் புரட்டியும் வீழ்த்து மேலுங் கீழுமாயிருவரும் வெகுநேரம் தள்ளுண்டுகிடந்து போராடினார்கள் காலவன் இளமையும் வலிமையுமுடையனாதல்பற்றி வீரசிங்கனைவென்று அவனைத் தரைமேல் நிமிரக்கிடத்தி அவன் மார்பின்மீதேறி இருந்துகொண்டு இடதுகையால் குரல்வளையைப் பற்றிக்கொண்டு வலது கையால் மார்பில் ஒரு குத்துக்குத்தினான். வீரசிங்கன் நமனுலகஞ்சென்றான். இதைத் தெரிந்த காலவன் உடனே வெளியே ஓடிவந்து வாயிற் காப்போனை மிக்க பரப்புடன் உரக்கக் கூப்பிட்டான். வாயிற்காப்போன் உடன் கிட்டவர அவனை நோக்கி "நம்மரசற்கு ஏதோ சுகத்தப்புக் கண்டிருக்கிறது; உயிர்ப்பு அடைபட்டுவிட்டதுபோல் தோன்றுகிறது; ஒரு மின்வெட்டு நேரத்துக்குள் நீ சென்று வைத்தியனை இங்கழைத்துக்கொண்டு வரவேண்டும்; செல்லுதி!" என்று கட்டளையிட்டான்.

அவ்வாயிற் காப்போன் வேறொன்றுங் கேட்க நில்லாமல் உடனே அங்கிருந்து ஒரு பாய்ச்சலாய்ப் பாய்ந்து போய் வைத்தியன் இருந்த அறையிற்சென்று இக்கொடிய செய்தியைத் தெரிவித்தான். சிறிது நிமிஷத்திற்குள்ளாக அக்கிழ வைத்தியன் கைகால் தத்தளிக்கப் பாதியுடை தரித்ததும் தரியாததுமாய் அங்கு ஓடிவந்து சேர்ந்தான். அநேகம் சேவகப் பெண்களும் சேவகப் பிள்ளைகளும் இச்செய்தியைக் கேட்டு மனந்தடுமாறித் திகைத்துத் தத்தளித்து அவ்வைத்தியன் பின்னால் ஓடிவந்தார்கள். காலவன் வாசலில் நின்றுகொண்டிருந்த வைத்தியனைமாத்திரம் கரகரவென்று 'கையைப்பிடித் திழுத்து உள்ளே தள்ளிவிட்டு மற்றவர்களை யெல்லாம் வெளியில் நிறுத்திக் கதவை யடைத்துவிட்டுத் தானும் உள்ளே யோடிப்போனான். அங்குச் சென்ற காலவன் அக்கிழ வைத்தியனுடைய தோளில் இடதுகையை வைத்து நன்றாய் அழுத்திக்கொண்டு வலதுகையிலிருந்த கட்டாரியை அவன் இதயத்துக்கு நேராகக் காட்டிப், பின்வருமாறு கூறலானான்.

"வாயைத் திறவாதே; ஏதாவது பேசுவாயாகில் உடனே ஒரே குத்தில் சாய்த்துவிடுவேன்; அரசன் கிடப்பதைப் பார்; நன்றாய்ப் பார்த்துக்கொள்; அரசன் எதனாலிறந்தான் என்று கேட்போர்க் கென்ன கார

ணஞ் சொல்லுவையோ அதை எனக்கு இப்பொழுது சொல்" என்று வாயாற் கூறிக்கொண்டே வைத்தியனைத் தோளைப் பிடித்தபிடி விடாமல் இட்டுக்கொண்டு போய் அரசனுடைய பிரேதத்தின் பக்கத்தில் இருத்தினான். வைத்தியனோ உடல் முழுதுங் கிடுகிடுவென்று விறைக்கிறான். மறுபடியும் காலவன் வைத்தியனைப்பார்த்து "அரசனை நன்றாய்ப் பார்த்துக்கொள். அரசன் எப்படிஇறந்தான் என்பதைச் சொல் உன்னிடத்தில் மற்றுள்ள பேர்கள் கேட்டால் என்ன காரணஞ் சொல்லுவையோ அதை என்னிடம் சொல்" என்றான்.

அரசனிறந்தது இன்னகாரணத்தால் என்பதை வைத்தியன் சந்தேகமில்லாமல் தெரிந்துகொண்டான். பக்கத்திலிருந்து பார்த்த அவன் கண்ணுக்கு உப்பித்தோன்றிய அரசனுடைய தொண்டைப்பக்கத்தில் காலவன் கைந்நகம், புலிநகம் பதிந்துகிடக்குமாறு பதிந்துகிடந்தது புலப்பட்டது. ஆயினும் அப்பொழுது அவனிடத்தில் அக்காரணத்தைச் சொல்லியிருந்தால் அவன் கட்டாரிக்குத் தன் மார்பு உறையாய்விடுமென வைத்தியனுணர்ந்தான். அவன் பிறர்செவிக்குக் கேளாதவிதத்தில் மெதுவாய் "மந்திரிவரியரே! தாங்களுரைத்தவாறே தான்; மந்திரிகளுக்குள் முதல்வராகிய உமது மொழி பொய்க்குமா! அரசன் வாயுக்குத்தினாற்றான் இறந்தார். அதற்குச் சிறிதும் சந்தேகமில்லை" என்றான்.

இதைக்கேட்டுக் காலவன் சிறிது நகைத்துப் பின் வைத்தியனை எழுந்திருக்கச்சொல்லி அவனைப்பார்த்து "நீர் வைத்தியரிற் சிறந்தவரன்றோ! உமக்கு உண்மை புலப்படாமற்போமா! உம்மை மிக மெய்ச்சினேன். நல்லது! இப்பொழுது நீர் வெளியிற்போய் பிரஜைகள் அனைவோரும் அறிய அரசன் இறந்துபட்ட தன்காரணத்தைத் தெரிவிக்க! கோட்டைவாயில்களில் பலகைகள் வரைந்து தூக்கும்படி ஏற்பாடுகள் செய்க; யாம் நாளைக் காலையில் வள்ளுவர்களைக்கொண்டு பறையறைவித்து இச்செய்தியைப் பரப்புவோம். இந்நாட்டிற் கிதுமுதல் அரசன் யாமே என்றும் தெரிவிப்போம்" என்றுரைத்து வைத்தியனை அனுப்பிவிட்டனன்.

இதற்குள், அரண்மனைக்குள் பேரரவமுண்டாவதையும் தன் பிதாவின் சப்தம் கேளாமலிருப்பதையு மறிந்த சேல்வி தன் கன்னியாமாடத்தைவிட்டுப் புறப்பட்டு நேராய்அரசனிருக்குமிடத்தை நாடிவரப் புறப்

சமாசாரக்குறிப்புகள்.

யாப்பருங்கலக்காரிகையும் உரையும் :—யாழ்ப்பாணம். அ. குமாரசுவாமிப் புலவரவர்கள் பதிப்பித்தனுப்பி நம் கைக்கெட்டிய இப்புத்தகத்தின் ஒரு பிரதிகண்டு மகிழ்கின்றோம். எழுத்துச் சொல்லிலக்கண வுணர்ச்சிக்கு நன்னூல்போல யாப்பிலக்கண மறிதற்குச் சாதாரணமாய் உபயோகிக்கப்பட்டுவரும் இந்நூலும் உரையும் வழுஉக்கள் மிகுந்து கற்போருக்கு உபகாரமில்லாத விதத்தில் வழங்கிவந்தனவற்றை வழுவறப் பரிசோதித்து வேண்டுழி விரித்தும் விளக்கியும் புதுக்கியும் திருத்தியுமிருக்கின்றனர். எவ்வாற்றானும் விளங்காதனவற்றை இருந்தவாறே பதிப்பித்திருக்கின்றனர். இந்நூலின் வரும் அரும்பதங்களின் பொருள்களை விளக்கி ஒரு அகராதியும் சேர்த்திருக்கின்றனர். முன்னிருந்த பிரதி ரூபங்களோடும் இப்பதிப்பினைச் சேர்த்துப் பார்க்குங்கால் இதிலுள்ள சீர்திருத்தங்கள்கொண்டு இவர் புத்துரை செய்ததாகவே கொள்ளவேண்டும். இந்நூலைப் பதிப்பித்த புலவர் பழைய தமிழ் நூல்களை உலகத்திற் செளிதில் பயன்படுமாறு அச்சிடுவித்தலையே தமது பிரதானத் தொழிலாகக் கொண்டிருந்து வாழ்நாள் நீத்த யாழ்ப்பாணத்து வித்வ சிரோமணியாகிய சி. வை. தாமோதரம்பிள்ளை யவர்களுக்கு அவ்விஷயத்தில் பெருந்துணைவராய் நின்றுதவியவர். தமிழுலகத்திற்கு இவர் புரிந்திருக்கும் உபகாரங்கள் பலவற்றுள் இதுவுமொரு பேருதவியே. வாசகமெழுதுவதிலும் செய்யுள் இயற்றுவதிலும் ஒரே தன்மைத்தான திறமையுடையார் சிலரே. அவருள் இவர் முதலிடம் பெறுந்தகையுடையவர் என்பதற்கையமில்லை. இப்புத்தகத்தின் விலை அணா 8.

*　　　*　　　*

நம் பிரிட்டிஷ் அரசர் பெருமான்களுக்குள்ள ஒருபெருங் கஷ்டம்:—நம் அன்னைபோன்று நம்மையெல்லாம் ஆதரித்து ஆண்டு காலஞ்சென்ற இந்திய சக்கரவர்த்தினியாரால் 1857-ம் வருடத்தில் செய்யப்பட்ட உறுதிமொழிப்படி அன்றுதொடங்கி இன்றுவரை பிரிட்டிஷ் குடிகளாயுள்ளார் யாவரும் தத்தம் மனப்பாங்கின்படி மத விஷயத்தில் பிரவர்த்திக்க யாதொரு தடையுமின்றி முழு உரிமை பெற்றிருக்கின்றார்கள்.

இவரது தண்ணிய குடை நிழலில் ஒதுங்கி நிற்கும் நமக்கு இப்பெரும்பேறு இவரையன்றி நம்மையாண்ட வேறு யாவர்காலத்திற்றான் பெற்றோம்! ஏனைய அரசாட்சியில் இஃதன்றி இதற்கு எதிரிடையான வெகு கஷ்டங்களை அனுபவித்தோமென்பது சரித்திரவாயிலாய் அறிந்ததே. இவ்வளவு மேலான உரிமையைத் தந்தாலும் நம் பிரிட்டிஷ் அரசர்கள் தங்கள் அறிவிற்கு உண்மையெனக் கண்டறிந்த எவ்வித மதத்தையும் அனுசரிக்கக்கூடாதென்றும் "புராட்டஸ்றன்று" மார்க்கத்திலேயே இருக்கவேண்டுமென்றும் உள்ள நிர்பந்த சட்டமொன்று ஏற்பட்டிருக்கின்றது. இப்பெரும் கஷ்டத்தை நினைக்குந்தோறும் நம்முளம் மிக நடுங்குகின்றது. ஆனால் இவர்களைப்பார்க்கிலும் நாம் இவ்விஷயத்தில் எவ்வளவு மேலான சுவாதந்திரியத்தைப் பெற்றிருக்கின்றோம்.

விக்ரோரியா சரமகவி.

அறுசீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

(1) எண்ணுண்ட பாவலர்பா விசையாண்டு
நெடுங்காலம் இன்பம் பல்க!
மண்ணுண்ட காவலர்க்குண் மணிவிளக்கே!
மன்னுயிர்க் கின்னுயிரே! வையம்
பெண்ணுண்டா ளெனுஞ்சீர்த்தி பிள்ளைசிறு
வாய்வரவும் பிறங்கிப் பின்னர்
விண்ணுண்டு புகழ்படைப்பான் மேவினையோ
விக்ரோரி யாமென்கொம்பே!

(2) மட்டடங்கா மாண்புயிர்கள் மாட்டரும்பு
மனத்தினளாய் மறமாம்பாவிக்
கெட்டாத இருக்கையளாய் இருந்தமென்னே!
"இந்நாளில் எந்நாளில்லாக்
கட்டமெலாம் போவர்ப் போர்க் களத்தினிடைக்
காண்கின்றேம், காணேம்" என்றே
விட்டெம்மை விரைந்தனையோ விக்ரோரி
யாவென்னும் விமலராணி!

(8) தாயிழந்த மகப்போலும் ஜலமிழந்த
கொடிப்போலும் தயங்கித் துன்பத்
தீயுழந்து வாடுகின்றேம்; சிந்தையழல்
வெளிவிடுத்துத் தேறவென்றால்
வாயிழந்து வருந்துகின்றேம்; மனத்தயர்வும்
மலிந்து மலிந்தன்றோ! எல்லாம்
வீயிழந்த தடமான; விழியிழந்த
முகமானேம் விளம்பலாற்றேம்

(4) நற்றவத்தி னருங்கலமே நற்குணத்தின்
ஒருவாய்ப்பே நாளும் ஞாலம்
உற்றுவரும் அருக்கனெருக்காலும் மறைந்
திடலோவ்வா உலப்பில் தேயம்
பெற்றிருந்தும் புகழதனின் பெரிதென்றே
பலசெயலால் பேணிக்கொண்டாய்;
வெற்றுடம்போ டேகினும்நின் மெய்யுடம்பாம்
புகழுடம்பு விளிகில்லாவே

கே. என். சிவராஜபிள்ளை, பி. ஏ.